**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**EA.No.13/2022 in EP.No.1/2017 in OS.No.4/2015 - PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.திருநாவுக்கரசு | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.கோவிந்தசாமி | Occupation | பணி ஓய்வு |
| Village /Area | அம்மூர் | Age | 68 |
| Taluk | வாலாஜா | Aadhar Card No. | 9262 7602 3447 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **13.03.2026.**

**முதல் விசாரணை:**

இந்த மனுவில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததை நான் பெற்றுக்கொண்டேன். நான் அம்மூரில் வசித்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.2 உயில் ஆவணத்தை கன்னியப்பன் என்பவர் அவருடைய மகன்களான விஜயராஜ் மற்றும் குலோத்துங்கன் ஆகிய இருவருக்கும் எழுதி வைத்தார். அதில் நான் 1-வது நபராக சாட்சி கையெழுத்து போட்டேன். 2-வது நபராக பழனி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டார். உயில் ஆவணம் எழுதி வைத்த போது கன்னியப்பன் ஆரோக்கியமாக இருந்தார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

கன்னியப்பன் அம்மூரை சேர்ந்தவர். இந்த வழக்கு எதற்காக நடக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது. கன்னியப்பன் என்னென்ன ஆவணங்களின் அடிப்படையில் உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அவர் பெயரிலுள்ள கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் உயில் ஆவணம் எழுதி வைத்தார். நான் சொல்வது போல் அந்த உயில் ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணம் சம்மந்தப்பட்ட தரப்பினர்களின் கையெழுத்துகள் இல்லாத சான்றிட்ட நகல் என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்துகள் யார்யார் வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது. உயில் நடைமுறைக்கு வந்தது என்று எனக்கு தெரியும். அந்த உயில் ஆவணம் நடைமுறைக்கு வராத ஆவணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.